



# த.வெ.க. அமைச்சரவையில் பா.ம.க. இடம்பெறாது

## அன்புமணி ராமதாஸ் திட்டவட்டம்

திண்டிவனம், ஜூலை.26–

விழாவில் கலந்துகொண்ட பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:– நீட் தேர்வை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும். இந்தியாவிற்கு தேவையில்லாத ஒரு தேர்வு நீட். கிராமப்புற மாணவர்கள் நீட் தேர்வினால் மருத்துவம் பயில முடியவில்லை.

ஒரு தேர்வு தற்கொலைக்கு தூண்டும் என்றால் அந்த தேர்வே தேவையில்லை. நீட் தேர்வில் வினாத்தாள் வெளியாகி உள்ளதால் தகுதி இல்லாத மாணவர்கள் மருத்துவத்திற்கு வருகிறார்கள்.

டெல்லியில் போராடிய மாணவர்கள் மீது எந்த ஒரு வழக்கும் போடக்கூடாது. மாணவர்கள் போராட்டத்தில் மாணவர்கள் போல் வந்து பெண்களை இழிவுப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய கல்வி மந்திரி ராஜினாமா செய்தது வரவேற்கத் தக்கது. தமிழ்த்தாய் வாழ்த்து 3–வது இடத்தில் தான் பாடப்படும் என மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மூலம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது கண்டனத்துக்குரியது.

இதில் கவர்னர் அழுத்தம் கொடுக்கக்கூடாது. அரசியல் செய்யக் கூடாது. நல்ல எதிர்க்கட்சியாக பா.ம.க. செயல்படுகிறது. த.வெ.க. அமைச்சரவையில் நாங்கள் இடம்பெற மாட்டோம்.

பா.ம.க. நிர்வாகி ஒருவர் நாங்கள் அதில் இடம்பெறுவோம் என்று கூறியிருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுப்பேன். பா.ம.க. நல்ல திட்டங்களை சொன்னால் தமிழக அரசு ஏற்றுக்கொள்கிறது.

தென்மாவட்டங்களில் லாக்கப் மரணம் என்பது நிகழ்கிறது. அப்படி நிகழாமல் காவல்துறை செயல்பட வேண்டும்.

தி.மு.க. செய்ததை தான் த.வெ.க. அரசு செய்துள்ளது. குவாரிகளை முறைப்படுத்தினால் தமிழக அரசுக்கு ரூ.25 ஆயிரம் கோடி வருவாய் கிடைக்கும். டாக்டர் ராமதாஸ் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவது அவரது முடிவு. அரசியலில் ஓய்வு என்பது கிடையாது. அவருடைய வழிகாட்டுதலில்தான் எல்லாம் நடக்கும்.

பா.ம.க.வில் அவருடைய ஆலோசனைகள், வழிகாட்டுதல் அனைத்தும் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.



திண்டிவனம் அடுத்த கோனேரிக்குப்பம் டாக்டர் ராமதாஸ் கல்வி அறக்கட்டளை வளாகத்தில் நடந்த பிறந்தநாள் விழாவில் டாக்டர் ராமதாஸ் பேசியபோது எடுத்தபடம். அருகில் அன்புமணி ராமதாஸ் உள்ளார்.

### ஒரே காரில் வந்த டாக்டர் ராமதாஸ்-அன்புமணி

டாக்டர் ராமதாசின் பிறந்தநாளை முன்னிட்டு திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் உள்ள இல்லத்திற்கு அன்புமணி ராமதாஸ் அவரது குடும்பத்தினருடன் நேற்று வருகை தந்தார். அங்கு டாக்டர் ராமதாசை சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து ஆசி பெற்றார். பின்னர், கோனேரிக்குப்பம் டாக்டர் ராமதாஸ் கல்வி அறக்கட்டளையில் நடந்த விழாவுக்கு டாக்டர் ராமதாசும், அன்புமணியும் ஒரே காரில் சென்றனர். மேலும் இருவரும் விழா மேடையில் அருகருகே அமர்ந்திருந்தனர். இது பா.ம.க. தொண்டர்கள் மத்தியில் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

பா.ம.க.வை அன்புமணி பார்த்துக்கொள்வார்:

# ‘அரசியலில் இருந்து ஓய்வுபெறுகிறேன்’

## பிறந்தநாள் விழாவில் டாக்டர் ராமதாஸ் பரபரப்பு அறிவிப்பு

திண்டிவனம், ஜூலை.26-

பா.ம.க.வை அன்புமணி பார்த்துக்கொள்வார் என்றும், அரசியலில் இருந்து ஓய்வுபெறுகிறேன் என்றும், தனது 88–வது பிறந்தநாள் விழாவில் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார். அவரது இந்த அறிவிப்பு அரசியல் வட்டாரத்தில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### கருத்து மோதல்

டாக்டர் ராமதாஸ் கடந்த 1989–ம் ஆண்டு பாட்டாளி மக்கள் கட்சியை தொடங்கினார். வடதமிழகத்தில் வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கேட்டு பல்வேறு போராட்டங்களை நடத்தினார். இதனால் தமிழக அரசியல் கட்சிகளில் பா.ம.க. ஒரு முன்னணி கட்சியாக உருவானது. தொடர்ந்து தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து சட்டமன்றம், நாடாளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டதால் பா.ம.க.வில் பல எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் உருவானார்கள். இதனால் பா.ம.க. மத்திய மந்திரி சபையிலும் இடம் பெற்றது.

இந்த நிலையில், கடந்த 2022–ம் ஆண்டு மே 28–ந்தேதி தனது மகனான டாக்டர் அன்புமணியை, பா.ம.க. தலைவராக ராமதாஸ் அறிவித்தார். இந்த சூழலில் கடந்த 2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28–ந்தேதி நிறுவனர் டாக்டர் ராமதாசுக்கும், டாக்டர் அன்புமணிக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. இதனால் 2026 சட்டமன்ற தேர்தலில் அன்புமணியும், டாக்டர் ராமதாசும் தனித்தனியாக வேட்பாளர்களை நிறுத்தினர். இதில் டாக்டர் அன்புமணி அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து மாம்பழம் சின்னத்திலும், டாக்டர் ராமதாஸ், சசிகலாவுடன் கூட்டணி அமைத்து சிலிண்டர் சின்னத்திலும் போட்டியிட்டனர். தேர்தல் முடிவில் டாக்டர் ராமதாஸ் தரப்பில் போட்டியிட்ட யாரும் வெற்றிபெறவில்லை. அன்புமணி தரப்பில் போட்டியிட்ட 4 பேர் வெற்றிபெற்றனர்.

### பிறந்தநாள் விழா

இதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் 24–ந்தேதி டாக்டர் ராமதாஸ்–சரஸ்வதி ஆகியோரின் திருமண நாளையொட்டி அன்புமணி குடும்பத்தோடு திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்திற்கு சென்றார். அங்கு பழைய கசப்பான நிகழ்வுகளை மறந்து டாக்டர் ராமதாசும், அன்புமணியும் ஒருவரையொருவர் கட்டித்தழுவி ஆனந்த கண்ணீர் வடித்தனர். இதனால் இருவருக்கும் இடையே நடந்த மோதல் போக்கு முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாசின் 88–வது பிறந்தநாள் விழா விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த கோனேரிக்குப்பத்தில் உள்ள டாக்டர் ராமதாஸ் கல்வி அறக்கட்டளை வளாகத்தில் நேற்று கொண்டாடப்பட்டது.

### ஜி.கே.மணி புறக்கணிப்பு

விழாவில் பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், சவுமியா அன்புமணி உள்ளிட்ட குடும்பத்தினர் மற்றும் பா.ம.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். ஆனால் டாக்டர் ராமதாஸ் கல்வி அறக்கட்டளை தலைவர் ஜி.கே.மணி இந்த விழாவில் கலந்துகொள்ளாமல் புறக்கணித்துவிட்டார்.

முன்னதாக கல்வி அறக்கட்டளை வளாகத்தில் 88 மரக்கன்றுகளை டாக்டர் ராமதாஸ், அன்புமணி ராமதாஸ், சவுமியா அன்புமணி மற்றும் குடும்பத்தினர் நட்டு வைத்தனர்.

### ஓய்வுபெறுகிறேன்

விழாவில் டாக்டர் ராமதாஸ் பேசியதாவது:–

எனக்கு 88–வது வயது தொடங்கிவிட்டது. எனவே இன்று முதல் (அதாவது நேற்று) அரசியல் துறவறம் மேற்கொள்ள உள்ளேன். (அரசியல் துறவறம் என்பது அரசியலில் இருந்து ஓய்வுபெறுவது என்று பொருள்) இனி பா.ம.க.வை டாக்டர் அன்புமணி பார்த்துக்கொள்வார். எனக்கு சில மாதங்களுக்கு முன்பு தொடங்கிய தலைசுற்றல் பிரச்சினை இன்னும் தொடர்கிறது.

அதனால் என்னால் நீண்ட நேரம் பேச முடியவில்லை. அரசியலில் இருந்து நான் ஓய்வு பெற்றுவிட்டதால் இனி அரசியல் ரீதியாக என்னிடம் யாரும் பேச வேண்டாம். இனி அனைத்தையும் டாக்டர் அன்புமணி பார்த்துக்கொள்வார். என்னை பார்க்க வருபவர்கள் நலம் விசாரித்துவிட்டு மட்டும் செல்லலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

### அன்புமணி புகழாரம்

தொடர்ந்து டாக்டர் அன்புமணி ராமதாஸ் பேசுகையில், “வி.பி.சிங், கன்சிராம், ராம்விலாஸ் பஸ்வான், முலாயம் சிங் யாதவ், சரத் யாதவ் உள்ளிட்ட தேசிய தலைவர்களின் வரிசையில் டாக்டர் ராமதாசும் ஒரு தேசிய தலைவராகவும், மிகப்பெரிய சமூக நீதி சீர்திருத்தவாதியாகவும் திகழ்கிறார். இந்திய அளவில் 2 இடஒதுக்கீடுகளையும், தமிழ்நாட்டில் 4 இடஒதுக்கீடுகளையும் பெற்றுத்தந்தவர் டாக்டர் ராமதாஸ் என்று புகழாரம் சூட்டினார்.

# முதல்-அமைச்சர் ரங்கசாமியுடன், ராமதாஸ் மகள் ஸ்ரீகாந்தி சந்திப்பு

## என்.ஆர்.காங்கிரசில் சேர விருப்பம்

புதுச்சேரி, ஜூலை.26–

என்.ஆர்.காங்கிரஸ் கட்சியை தமிழகத்தில் விரிவுபடுத்த அதன் நிறுவன தலைவரான முதல்–அமைச்சர் ரங்கசாமி நடவடிக்கை எடுத்து வருகிறார். இதனை தொடர்ந்து சேலத்தை சேர்ந்த பா.ம.க. முன்னாள் எம்.எல்.ஏ. அருள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் முதல்–அமைச்சர் ரங்கசாமியை புதுவையில் சந்தித்து தங்களை என்.ஆர்.காங்கிரஸ் கட்சியில் இணைத்துக் கொண்டனர். முன்னாள் எம்.எல்.ஏ. அருளை என்.ஆர். காங்கிரசின் தமிழக தலைவராக நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. முதல்–அமைச்சர் ரங்கசாமியின் பிறந்தநாள் அன்று சென்னையில் பிரமாண்ட விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மகள் ஸ்ரீகாந்தி (பா.ம.க.வின் முன்னாள் செயல் தலைவர்) மற்றும் அவரது மகன் முகுந்தன் (பா.ம.க. இளைஞரணி முன்னாள் தலைவர்) ஆகியோர் நேற்று புதுச்சேரி வந்தனர். அவர்கள் முதல்–அமைச்சர் ரங்கசாமியை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினர். அப்போது அவர்கள் என்.ஆர். காங்கிரசில் சேருவதற்கு விருப்பம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.



# தங்கம் விலை பவுனுக்கு ரூ.560 உயர்வு

சென்னை, ஜூலை.26–

தங்கம் விலை கடந்த 23–ந்தேதி வரை உயர்ந்து வந்த நிலையில், நேற்று முன்தினம் குறைந்திருந்தது. நேற்று மீண்டும் அதிகரித்துக் காணப்பட்டது. அதன்படி, நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 230–க்கும், ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 5 ஆயிரத்து 840–க்கும் விற்கப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கிராமுக்கு ரூ.70–ம், பவுனுக்கு ரூ.560–ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 300–க்கும், ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 6 ஆயிரத்து 400–க்கும் விற்பனை ஆனது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், நேற்று மாற்றம் இல்லாமல், ஒரு கிராம் ரூ.240–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 40 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது.


வீட்டு மனை (PLOT) விற்பனைக்கு
சாத்தூர் நகரில் புதிய G.H.–க்கு மிகவும் அருகில் வீடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ள காலி வீட்டு மனை (PLOT) விற்பனைக்கு உள்ளது. காலி மனையின் அளவு
300 குழிகள் (6.2 சென்ட்)
உடனடியாக வீடு கட்டலாம்
தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.
73970 73458

சேல்ஸ்மேன்கள் தேவை
FMCG Product நிறுவனத்திற்கு
இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், கிருஷ்ணன்கோவில் ஊர்களை சேர்ந்த
சேல்ஸ்மேன்கள் தேவை
தொடர்புக்கு: 95146 55599

ஸ்ரீ அன்னை மாடர்ன் ரைஸ் மில்
தளவாய்புரம் (ராஜபாளையம் தாலுகா) - 626 188
ரைஸ்மில் தொட்டி போட வியாபாரி தேவை
தொடர்புக்கு: 79046 03672, 99945 22003
இங்கு குறைந்த விலையில் வியாபாரி மற்றும் தரகர்களுக்கு மொத்தமாகவும், சில்லறையாகவும் தரமான அரிசி கிடைக்கும்.

ஆட்கள் தேவை
சமையல் மாஸ்டர்
சாத்தூரில் இயங்கும் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள சமையல் மாஸ்டர் தேவை.
ஹாஸ்டல் அல்லது ஃபேக்டரிகளில் பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
தங்கும் வசதி உண்டு
தொடர்புக்கு: +91 92800 93622

கடை வாடகைக்கு
பிள்ளையார்பட்டி பைபாஸ்–ல்
5 ஏசி ரூம் மற்றும் ரெஸ்டாரன்ட் டீ ஷாப் உடன் கூடிய ஒரே கடையாக வாடகைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
96559 11159, 91596 10025

சிவகாசி திருப்பதி காம்ப்ளக்ஸ்
திலகராஜ் டெக்ஸ்டைல்ஸ்
69, N.R.K.R. ரோடு, கருவாட்டுப்பேட்டை அருகில், சிவகாசி. PH.94873 90763
அழுக்கு, துவண்ட சேலைகள், பட்டு சேலைகள், ரெடிமேட் ஆடைகள்
25-7-26 சனி 26-7-26 ஞாயிறு 2 நாள் மட்டும்
மலிவு விலையில் கிடைக்கும்.
ரூ.300 to 500 வரை விற்ற அனைத்து கட்சி வேஷ்டிகள் மலிவு விலையில் ரூ.100/-க்கு கிடைக்கும்.

इंडियन बैंक இந்தியன் வங்கி
இந்தியன் வங்கி காரைக்குடி மண்டலம்
திருத்தங்கல் (விருதுநகர்) பகுதியில் வங்கிக் கிளை மற்றும் ஏ.டி.எம். மையம் அமைக்க இடம் (கட்டிடம்) தேவை
விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் பகுதி மக்களின் வசதிக்காக இந்தியன் வங்கி தனது புதிய கிளையை துவங்கவுள்ளது. எனவே வங்கிக் கிளை மற்றும் ஏ.டி.எம். மையம் அமைப்பதற்கு இடம் (கட்டிடம்) தேவைப்படுகிறது.
வங்கி மற்றும் ஏ.டி.எம். மையம் அமைக்க வாடகைக்கு இடம் தர விருப்ப மனுக்கள் கோரப்படுகிறது. கட்டிடம் 1200-1500 சதுர அடிக்கு மிகாமல் உள்பரப்பளவு உள்ளதாக இருக்க வேண்டும். காலிமனை (கட்டிடம் கட்டித்தரப்பட வேண்டும்) / கட்டப்பட்ட கட்டிடம் / கட்டிக்கொண்டிருக்கும் கட்டிடமாகவும் இருக்கலாம். கட்டிடம், வங்கி / ரிசர்வ் வங்கி விதிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். தரைத்தளமாகவும், வாகனங்கள் நிறுத்துவதற்கு இடவசதியுடன் இருத்தல் வேண்டும்.
விருப்பம் உள்ளவர்கள் சிவகாசி கிளை அல்லது காரைக்குடி இந்தியன் வங்கி மண்டல அலுவலகத்தில் 27.07.2026 முதல் விண்ணப்ப படிவத்தை ரூ. 250/- வரைவோலை (DD on Indian Bank) செலுத்தி (திருப்பி தரப்படமாட்டாது) பெற்றுக் கொள்ளலாம்.
பூர்த்தி செய்யப்பட்ட 2 படிவங்களை (Financial Bid, Technical Bid) 17.08.2026 மதியம் 1.00 மணிக்குள் மூடப்பட்ட தபால் கவரின் மேல் "வாடகைக்கு விண்ணப்பம்" என்று எழுதி விண்ணப்பத்துடன் ஒப்புதல் வைப்பு தொகை ரூ. 5000/–க்கான (ஐந்தாயிரம் மட்டும்) வரைவோலை (DD on Indian Bank) (திருப்பி தரப்படும்) இணைத்து நேரில்/தபால் மூலம் சமர்ப்பிக்கவும்.
17.08.2026 அன்று மாலை 5.00 மணி அளவில் விண்ணப்பங்கள் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.
டெண்டர் குறித்த விவரங்களை பின்வருவனவற்றிலிருந்து பெறலாம்:
* இணையதளம்: https://www.indianbank.in/tenders/
* இந்தியன் வங்கி, சிவகாசி கிளை
மேலும் விபரங்களுக்கு
இந்தியன் வங்கி
மண்டல அலுவலகம், 34/3, சர்ச் முதல் வீதி, JRC 4D, ஸ்கேன் காம்ப்ளக்ஸ் முதல் தளம், காரைக்குடி-630001, தொலைபேசி: 89258 76203
இடைத்தரகர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் நிறுவனங்களிடமிருந்து வரும் மனுக்கள் ஏற்கப்படமாட்டாது. எந்தவிதமான இடைத்தரகும் வழங்கப்படமாட்டாது. எந்த ஒரு மனுவை ஏற்கவோ, நிராகரிக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.
மண்டல மேலாளர்

குடும்பத்திலுள்ள அனைவருக்கும் எண்ணற்ற ஆடைகள் இப்பொழுது ஆடி தள்ளுபடியிலே
இச்சலுகை ஆடி மாதம் முழுவதும்
சூப்பர் நாணயம் சில்க்ஸ்
ஆடி சூப்பர் தள்ளுபடி விற்பனை
ரூ.500க்கு 3 டாப்ஸ் வாங்கினால் 3 பிளாசா பேண்ட் இலவசம்
ரூ.500க்கு 3 ரெடிமேட் சொக்கா வாங்கினால் 3 சாரம் இலவசம்
ரூ.500க்கு 3 டி-சர்ட் வாங்கினால் 3 டிராக் பேண்ட் இலவசம்
ரூ.500க்கு 3 பிளவுஸ் வாங்கினால் 3 சேலை இலவசம்
மேலும் ரூ.1000 மதிப்புள்ள சுடிதார் மிடி வெஸ்டன் ரூ.250 மட்டுமே
தி பெஸ்ட் பேமிலி ஷாப்பிங்...
நைட்டி ரூ.100 மட்டுமே, 5 பனியன் பிரா ரூ.100 மட்டுமே
மேலும் பல சிறப்பு தள்ளுபடி, சூப்பர் நாணயம் சூப்பர் ஆடி
அரசரடி பஸ் ஸ்டாப் மேல்புறம், செட்டியார்பட்டி, தளவாய்புரம்
93619 62406, 91596 21731